Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை - 55 ஆவணி, 2022 பக்கங்கள் - 14 விலை - ரூபா 20.00





- ராஜவந்தான் மலையும் பின்னணியும்
- பிணைமுறிக் கடன் மறுசீரமைப்பு
- இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், சர்வதேச நாணய நிதியமும்

ஆய்வு - அறிவு - நிமிர்வு

# ராஜவந்தான் மலையும் அடிக்கடி துளிர்விடும் பௌத்தமத ஆக்கிரமிப்புகளும்





- கார்த்திகா -

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தின் திருகோணமலையில் மூதூர் பிரதேசமானது வயல்களும் குளங்களும், குளங்களை அண்டிய குன்றுகளும் நீண்ட அழகியகடற்கரைகளும் உடையது. முத்துஊர் என்பது மருவி மூதூர் எனும் பெயர்பெற்ற வரலாற்றுப் பின்புலம் கொண்டது. இங்கு தான் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மூன்றாம் கட்டை மலை என அழைக்கப்படும் ராஜவந்தான் மலை காணப்படுகிறது.

இலங்கை புவி வரைவியல் படத்தில் இம்மலை ராஜவந்தான் மலை என்றே பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெயர் மூதூர் பிரதேசத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ள முக்கியமான பெயர் ஆகும். இந்த ராஜவந்தான் மலையின் அமைவிடத்தை இவ்வாறும் விபரிக்க முடியும். மூதூர் பிரதேசத்தினூடு சேனையூர், சம்புக்களி சிறுகுன்று திட்டில் ஒரு மலைத்தொடர் தொடங்குகிறது. அது மயிலி மலை, கறிமூடி மலை, குறவன்பட்ட மலை என தொடர்ந்து இந்த ராஜவந்தான் மலையில் முடிகிறது. இந்த மலையின் கிழக்கு அடிவாரத்தையண்டி மாவலியாற்றின் ஒரு கிளை கிணாந்தி முனை வழியாக ஊடறுத்து சென்று கட்டைபறிச்சான் ஆற்றில் கலக்கிறது. இது "உப்பு நீரும் நன்னீரும் ஒரு சேர கலந்து பயணம் செய்யும் அழகு உடையது." என்கின்றனர் இதன் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரும்பும் அப்பிரதேச நலன் விரும்பிகளும் மக்களும்.

இதன் வரலாறானது பின்வருமாறு அமைகிறது. நாம் அனைவரும் அறிந்த சோழர் கால மன்னனான இராஜராஜசோழனின் மகனான வீரம் மிகு சோழ மன்னன் ராஜேந்திரன் இப் பிரதேசத்தை ஆட்சி செய்த காலத்தில் கொட்டியாரக் கானகன் தலைமையில் இப் பிரதேசம் நிர்வகிக்கப் பட்டு வந்தது. இந்த மலையின் கிழக்கடிவாரத்துக்கு அருகில் காணப்பட்ட சோழ அரசின் இலட்சணையுடன் சுவஸ்திசிறி பொறிக்கப்பட்ட கல்வெட்டு இப்பகுதியில் சோழர்களின் இருப்புக்கும் அதன் வழி தமிழரின் நிலவுடைமைக்கும் சாட்சியாக அமைந்தது எனலாம். இக் கல்வெட்டில் உள்ள தகவல் ராஜவந்தான் மலையில் அமைந்திருந்த சிவாலயம் பற்றியதாக அமைகிறது. இம்மலையை சூழவுள்ள மற்றும் கண்ணுக்கெட்டிய தூரம் வரையுள்ள வயல்கள் கோயிலுக்குரியது எனவும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

எனினும், பிந்தைய வரலாறு அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. மலை உச்சியில் இன்றளவும் ஒரு கோயிலின் எஞ்சிய பாகங்கள் சிதைந்த நிலையில் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. அவை இந்த ராஜவந்தான் மலையினதும் அங்குவாழ்ந்து சிவாலயத்தை வழிபட்ட தமிழ் மக்களின் பழமை வரலாற்றின் சாட்சிகளாக காணப்படுகின்றன எனலாம். இங்கு 1980ம் ஆண்டு தொல்லியல் ஆய்வை பேராசிரியர் இந்திரபாலா மேற்கொண்டார். அப்போது கல்வெட்டு படியெடுக்கப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறையில் பேணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. போரின் காரணமாக கடந்த காலங்களில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளினால் அந்த படிவ பதிவு இன்று எங்கு இருக்கின்றது என்பது அறியப்படவில்லை.

இம்மலை பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு உட்பட்டு வருகிறது. இதில் பழைய சந்தணவெட்டை, ராஜவந்தான்மலை, சுவாமிமலை என்பவற்றில் கல் அகழ்வுகளும் மணல் அகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 2018 ஆண்டளவில் திருக்கோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மறைந்த துரைரெட்ணசிங்கம் ஐயா அவர்களின் பெரும் முயற்சிக்கும் பங்களிப்பிற்கும் பின் திருகோணமலை அரச அதிபரால் இவற்றை நிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையால் அவை உடனடியாக நிறுத்தப்பட்டன. மற்றும் கிழக்கில் குறிப்பாக சிவபூமி, கோணேசர் பூமி என அடையாளப்படுத்தப்படும் திருகோணமலையில் திட்டமிட்டு வரலாறு அழிக்கப்பட்டு வருகிறது.

பல கோவில்களுக்கு அருகே திடீரென முளைக்கும் புத்தர் சிலைகளும் புதிதல்ல. அது போல் தான் இந்த ராஜவந்தான் மலையிலும் இன்று பௌத்த சின்னங்கள் வைக்கப்பட்டு ஒரு பௌத்த வழிபாட்டு தலமாக மாற்றும் முயற்சிகள் சில தரப்புகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதை காணக்கூடியதாக உள்ளது. அதற்கு சான்றாக கடந்த 2022 சித்திரை மாதம் 24 ஆம் திகதி ராஜவந்தான் மலை கோவிலை தரிசிக்க மக்களுடன் சென்ற இந்து மத குருமார்களுடன், "இது சிங்கள பிரதேசம்" எனக்கூறி பிக்குகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கபடுகிறது.

"மூதூர் மூன்றாம் கட்டை மலையின் உண்மை பெயர் "ராஜவந்தான் மலை" என்பதையும் இதன் வரலாற்றைப் பற்றி தெரிந்ததை எல்லாம் எமது சந்ததிக்கு தெரியப்படுத்த வேண்டும்."

தமிழர்களின் நிலம் சூறையாடப்படுவது இன்று வரை நிறுத்தப்படவில்லை. சில மத நல்லிணக்கத்தை விரும்பாத விசமிகளினால் பௌத்தம் என்ற போர்வையில் சைவத் தலங்கள் கொள்ளையிடப்படுகின்றன. ராஜவந்தான் மலை தமிழர்களின் தொன்மைமிகு நிலம். அந்த மலையில் பழமையான சிவன் கோயில் இருந்தமைக்கான அழிபாடுகள் இன்று பௌத்த அடையாளமாக சித்தரிக்கப்படுகின்றன. அந்த அடையாளங்கள் கொள்ளையிடப்பட்டு அங்கு ஒரு விகாரை கட்டப்படுகிறது. இது இங்கு வாழுகின்ற மக்களிற்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இன்று இலங்கையின் தமிழ் பகுதிகளில் நடந்துவரும் ஆக்கிரமிப்புகளில் இதுவும் ஒரு அங்கம். தமிழ் பகுதிகளில் உள்ள குன்றுகள் எல்லாம் பௌத்த அடையாளமாக ஆக்கிரமிக்கும் முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

மூதூர் மூன்றாம் கட்டை மலையின் உண்மை பெயர் "ராஜவந்தான் மலை என்பதையும் இதன் வரலாற்றைப் பற்றி தெரிந்ததையெல்லாம் எமது சந்ததிக்கு தெரியப்படுத்த வேண்டும் என பல சமூக அக்கறையாளர்களும் கூறி வருகின்றனர். எமது அடுத்த சந்ததி ராஜேந்திரன் கல்வெட்டு பற்றிய உண்மைகளை தெரிந்து கொள்ள வேண்டும். பேச்சு வழக்கிலுள்ள மூன்றாம் கட்டை மலையென்பதை தவிர்த்து இந்த மலை ராஜ வந்தான் மலை என்று அழைக்கப்பட வேண்டும் என்று தமிழ் அறிஞர்களும் சமூக அக்கறையாளர்களும் சொல்லி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







தமிழ் ஊடகத்திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு,யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்:nimirvueditor@gmail.com
இணையம்: WWW.nimirvu.org
தொலைபேசி: 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# தள்ளிப்போகும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி?

ஒவ்வொரு ஆண்டும் ஆவணி 30 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கான சர்வதேச தினம் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. அந்த நாளில் இலங்கையில் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி வடக்கு கிழக்கு எங்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கங்களின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு பேரணிகள் இடம்பெற்றன. உலகெங்கும் இடம்பெறுகின்ற யுத்தங்களால் பாதுகாப்பு தரப்பினரால், காவல்துறையினரால், அரச கைக்கூலிகளினால் இலட்சக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். காணாமல் ஆக்க ப்பட்டவர்களின் எண்ணிக்கையின் உலக தர வரிசையில் இரண்டாவது நாடாக இலங்கை உள்ளது. தங்களின் உறவுகள் எங்கே இருக்கின்றனர்? அவர் களின் நிலை இன்று எப்படி இருக்கிறது? சித்திரவதை செய்யப்படுகிறார்களா? நோய் வாய்ப்பட்டுள்ளார்களா? இப்போதும் எங்காவது இரகசிய முகாம்களில் கொத்தடிமைகளாக வைத்திருந்து வேலை வாங்கப்படு கின்றார்களா? இவ்வாறு எதுவுமே தெரியாமல் இங்கே உறவுகள் அந்த ரிப்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

இறுதிப் போரின் பின்னர் முகாம்களில் வைத்து தாய், தந்தையால், மனைவியரால் இராணுவத்தின ரிடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? இவர்கள் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வர்களாவர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எல்லாப் பிரச்சினைகளையும் ஒன்றாக மூடி விட நினைக்கிறது அரசாங்கம். அதற்கேற்ற வகையில் தான் காய்களை நகர்த்தி வருகின்றது. இன்று இலங்கை அரசை குடைந்து கொண்டிருக்கின்ற, சர்வதேச விசாரணைகளு க்கு அவர்கள் அஞ்சுகின்ற விவகாரமும் இது தான். தங்களது வாழ்நாள் முடிவடைவதற்குள் நீதியின் தீர்ப்பை பார்க்க விரும்புவதாகவும் இன அழிப்பு க்கு காரணமான அனைவரும் நீதியின் முன் சர்வ தேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும், தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமானவர்கள் இப்போதும் தமது பூர்வீக காணிகளை ஆக்கிரமித்து வருவதா கவும், அவர்கள் உடனடியாக தங்கள் காணி களில் இருந்து வெளியேற வேண்டுமெனவும், திட்ட மிட்ட பௌத்த ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும்,அரசியல் கைதிகளாக வாடும் உறவுகள் எந்தவித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட வேண்டுமெனவும், வவுனியாவில் 2000 நாள்களுக்கு மேலாக வீதி யோரத்திலிருந்து போராடிக் கொண்டிருக்கும் காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தினத்தையொட்டி விடு த்துள்ள அறிக்கையில் வலியுறுத்திக் கூறியுள்ளனர். கடந்த 12 வருடங்களாக போராடி வரும் காணாமல் ஆக்க ப்பட்டோரின் உறவுகளில் பலர் மரணமடைந்து வருகி ன்றனர். இதுவும் தமிழர்களுக்கு பெரும் இழப்பாகும். போராடும் உறவுகளுக்கு அவர்கள் கேட்கும் நீதி வழங்க ப்படவேண்டும். அதிலிருந்து சர்வதேசம் விலக முடியாது.

சர்வதேச குற்றவியல் நீதி மன்றில் இலங்கையை பாரப்படுத்துவதற்கு ஐக்கியநாடுகள் சபையை தூண்டுமாறு வலியுறு த்தி மனித உரிமைகள் பேரவையின் இணைத்த லைமை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்க ளுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஏற் பாட்டில் தமிழர் தரப்புகள் ஒன்றாக சேர்ந்து கடிதம் அனுப்பி வைத்துள்ளன. தொடர்ச்சியாக நிறைவேற்ற ப்பட்டு வந்த பிரேரணைகளை இலங்கை நடைமுறை ப்படுத்த தவறியுள்ளதால், இலங்கைக்கு மேலும் கால அவகாசங்களை வழங்குவது அர்த்தமற்றது எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்டுள்ள போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், காணாமல் ஆக்கப்படுதல் களுக்கு நீண்டகாலமாக தமிழ்மக்கள் கோரி நிற்கும் நீதியை பெற ஐ.நா மனித உரிமைகள் பேரவை சர்வ தேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்த துணை நிற்க வேண்டுமென சுட்டிக் காட்டப்படுள்ளது. தமிழர் தரப்புகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்குமா ஐ.நா மனித உரிமைகள் பேரவை?

- செ.கிரிசாந்-

# பிணைமுறிக் கடன்களின் மறுசீரமைப்பு

(பகுதி 3)

ஒரு நாட்டின் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பான நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் நடக்கும் பேச்சுவார்த்தைகளை பற்றி லீ புக்ஹைட் சொன்னவற்றின் ஒரு பகுதியை சென்ற இதழில் பார்த்தோம். அதின் மூன்றாம் பகுதியை இங்கு தருகிறோம்.

நீங்கள் ஒரு நாட்டுக்கு கடனளித்தவராக இருந்தால், அந்த நாடு ஒரு கடன் மறுசீரமைப்புக்கு போகுமாக இருந்தால், அந்தக் கடன் மறுசீரமைப்புக்கு கீழ் நீங்கள் அளித்த கடன் உள்ளடக்கப்படாமல் இருப்பதற்கு உரிய எல்லா முயற்சிகளையும் நீங்கள் எடுக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் கொடுத்த கடனின் அசலையும் வட்டியையும் முழுவதுமாக திருப்பி எடுப்பதுதான் உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாத பட்சத்தில் உங்கள் கடன் மறுசீரமைப்புக்கு உட்படும் என்று தெரிந்தால், மற்ற எல்லா கடனளித்தவர்களின் கடன்களும் மறுசீரமைத்தலுக்கு உள்ளாக வேண்டும் என்று நீங்கள் வாதிட வேண்டும்.

கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் நீங்கள் இருக்கும் போது, மற்றவர்களை அதிலிருந்து வெளியேற்றும் எந்தவொரு திட்டத்தையும் நீங்கள் பரிசோதித்து கேள்வி கேட்க விரும்புவீர்கள். இதற்கு சிறந்த உதாரணம், 2005 ஆம் ஆண்டு ஈராக்கில் நான் சந்தித்தது. அமெரிக்க 4வது காலாட்படை பிரிவின் "வேண்டுகோளின்" பேரில் சதாம் உசேன் அரச பதவியிலிருந்து "வெளியேறி" இருந்தார். வெளியேற முதல் அவர் செய்து வைத்திருந்த மோசமான செயற்பாடுகளில் ஒன்று 140 பில்லியன் டாலர் கடனை வாங்கி வைத்திருந்தது. இந்தக் கடன்கள் ஜப்பானிய வங்கிகள் தொடக்கம் கொரிய கட்டுமான நிறுவனங்கள் வரை அனைத்து வகையானவர்களிடமிருந்தும் வாங்கப்பட்டிருந்தன.

இந்த கடன்களை வழங்கியவர்களின் பல்வகைத்தன்மை வியக்க வைக்கும் வகையில் இருந்தது. அங்கு கடன் மறுசீரமைப்பு தொடங்கியபோது, அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு ஏன் அதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என பல்வேறு வாதங்களை முன்வைத்தார்கள். "கடன் மறுசீரமைப்பு முடிந்த பின் மீண்டும் ஈராக் கடன் வாங்க வேண்டும். அப்பொழுது தாங்கள் அந்தக் கடனை வழங்க தயாராக இருப்போம்." என்று வங்கிகள் வாதிட்டன. "நான் உங்களுக்கு உறைய வைக்கப்பட்ட கோழிகளை அனுப்பினேன். நீங்கள் அவற்றை பாஸ்ரா துறைமுகத்தில்



49 பாகை சூழலில் இருக்க அனுமதித்தீர்கள். அங்கு அந்தக் கோழிகளுக்கு மகிழ்ச்சியான அனுபவம் கிடைக்கவில்லை. அதற்கு நான் பொறுப்பல்ல. எனவே தயவுசெய்து என்னுடைய பணத்தை செலுத்துங்கள்" என்று ஒரு கோழிகளை பதனிட்டு ஏற்றுமதி செய்பவர் வாதிட்டார். இந்தச் செயல்பாட்டில் ஒரு கடனாளி நாடு ஒரு குறிப்பிட்ட கடனளித்தோர் குழுவுக்கு கடன் மறுசீரமைப்பிலிருந்து விலக்கு அளிக்க இணங்குவது கடனாளி நாட்டுக்கு மிகவும் ஆபத்தானது என்று நான் கூறுவேன். ஒரு பொதுவான ஒருமித்த கருத்து இல்லாவிட்டால், எந்தவொரு குறிப்பிட்ட கடனளித்தோர் குழுவிற்கும் விலக்கு அளிக்கப்படக் கூடாது. ஆனாலும், பன்னாட்டு நிதி நிறுவனங்கள், வர்த்தக கடன் வழங்குனர்கள், விற்பனையாளர் ஆகியோருக்கு விலக்கு அளிக்கப்படுவது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

அடமானக் கடன்களுக்கு விலக்கு அளிக்கப்படுவதும் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படும். ஏனெனில், அந்தக் கடன் ஒரு சொத்தை அடமானமாக வைத்து வாங்கப்பட்டது. அந்தக் கடன் திருப்பச் செலுத்தப்படாவிட்டால் அந்த சொத்தை கடனாளி நாடு இழக்க நேரிடும். உதாரணமாக, ஒரு விமானத்தை கடனுக்கு வாங்கினால், அந்தக் கடனை செலுத்தாவிட்டால் விமானத்தை இழக்க நேரிடும்.

சர்வதேச நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகள் ஊடாக தமது கடன் பிணக்குகளை தீர்த்துக் கொள்ளும் கடன் வழங்குனர்களுக்கு இந்த செயற்பாட்டில் என்ன நடக்கும்? இதற்கு பதிலாக வெனிசூலா நாட்டில் நடந்ததைப் பார்ப்போம். அந்நாட்டில் கடந்த இருபது ஆண்டுகளாக வெளிநாட்டு முதலீடுகளை தேசியமயமாக்குவது மற்றும்

அபகரிப்பது என்ற கொள்கையை வழக்க மாகக் கொண்ட செயற்பாடுகள் நடந்து வருகின்றன. உலக வங்கியின் முதலீட்டு தகராறுகளைத் தீர்ப் பதற்கான சர்வதேச மையத்தின் (International Center for the Settlement of Investment Disputes, ICSID) முன் நாற்பது வழக்குகள் இது தொடர்பாக வந்தன. நடுவர் மன்ற தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை வெனிசூலா குடியரசுக்கு எதிரான நட்ட ஈட்டு தீர்ப்புகள்.

கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில், கடனளித்தவர் களிடம் நிவாரணத்தை கோரும் போது, மிகுதியாக இருக்கும் கடன் தொடர்பாக கடனாளி நாடு என்ன செய்யப் போகிறது என்பதற்கான பதில் இல்லாமல் கடனளித்தவர்களால் அந்த நிவாரணக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கும். நடுவர்மன்ற தீர்ப்புகளும் ஒரு வகை கடனே. அந்த வகையில் கடன் மறுசீரமைப் பிலிருந்து நடுவர் மன்ற தீர்ப்பு வைத்திருப்பவர்களை விலக்கவோ அல்லது அவர்களுக்கு தனியாக பணம் செலுத்தவோ ஏனைய கடனளித்தவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். எனெனில், கடனளித் தவர்கள் தாம் வழங்கும் கடன் நிவாரணத்தை கடனாளி நாடு ஒரு குறித்த சிறு குழுவினரை திருப்திப்படுத்து வதற்காக பயன்படுத்துவதாக கருதுவார்கள். இதுதான் இங்கு நடக்கும் பேச்சுவார்த்தைகளின் இயங்கியல்.

## பிணைமுறிக் கடன் மறுசீரமைப்பு

பிணைமுறிக் கடன் மறுசீரமைப்பு உண்மையில் மிகவும் எளிமையானது. உண்மையில் அதில் இருப்பவை மூன்று கருவிகள் மட்டுமே. நாம் கட னின் அசலை குறைக்க முடியும். இதனை முடி வெட் டுதல் (haircut) என்று சொல்வார்கள். இரண் டாவது வட்டி விகிதத்தைக் குறைக்கலாம். மூன்றாவது கடனின் முதிர்ச்சிக் காலத்தை நீட்டிக்கலாம். அல்லது அந்த மூன்றில் விரும்பியவற்றை எடுத்து கலந்து பொருத்தலாம். பிணைமுறிக் கடன்களின் மறுசீரமைப்பில் செய்யக்கூடியது இவ்வளவுதான்.

ஒரு அரசாங்கத்துக்கு கடன் கொடுத்த உள்ளூர் நிதி நிறுவனங்களைத் தவிர, கடன் கொடுத்த வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் நிலைப்பாட்டையும் நாம் பார்க்க வேண்டும். இதனை நாம் ஐரோப்பாவில் நடந்த கடன் நெருக்கடி காலகட்டத்தில் அறிந்து கொண்டோம். அங்கு பிணைமுறிக் கடன்களை மறுசீரமைக்க வேண் டாம் அல்லது மிகவும் மென்மையான முறையில் மறு சீரமைக்க வேண்டும் என்று இந்த நிதி நிறுவ னங்கள் தங்கள் சொந்த அரசாங்கங்களை நச்சரித்தன. ஐரோப்பிய அரசாங்கங்கள் அதனை ஏற்றுக் கொண்டன.

அவை ஏன் இந்த எதிர்மறையான கொள்கையை ஏற்றுக்கொண்டன என்பது ஒரு கேள் விக்குறி. 2012 இல் கிரேக்கத்தின் பிணை முறிக் கடனை மறுசீரமைப்பதற்கு முன்னராக ஐரோப் பிய அரசாங்கங்கள் கடன் நெருக்கடிக்குள் இருந்த நாடுகளின் கடன்களை மறுசீரமைக்கவில்லை. ஐரோப்பிய அரசாங்கங்கள் கடன் நெருக்கடிக்குள் இருந்த நாடுகளுக்கு பண உதவி வழங்கி நெருக்க டியிலிருந்து தூக்கி விட்டன. அவை ஏன் அவ்வாறு செய்தன? ஒரு காரணம் என்னவென்றால், இந்தக் கடனாளி நாடுகளின் பெருமளவான கடன் பத்திரங்களை வடக்கு ஐரோப்பிய வங்கிகள் வைத்திருந்தன. கடனாளி நாடுகள் அசலைத் திருப்பிக் கட்டாவிட்டால் அந்த வங்கிகள் தோல்வியடையும் என்பதை வங்கிகள் தமது சொந்த அரசாங்கங்களுக்கு தெரிவித்தனர். அந்த வங் கிகள் தோல்வியடைந்து அவற்றை மீளக்கட்டமைப் பதிலும் விட அந்த வங்கியிடம் கடன்பட்ட நாடு களுக்கு உதவி செய்து அவற்றினூடாக வங்கிக்கு சேர வேண்டிய காசைப் பெற்றுக் கொள்வது அந்த அரசாங்கங் களுக்கு அரசியல் ரீதியாக அனுகூலமாக இருந்தது.

1980 களிலோ 90 களிலோ இது நடக்க வில்லை என்று நான் சொல்லப்போவதில்லை. அந்தக் காலத்திலும் வணிக வங்கிகள் நிச்சயமாக அமெரிக்க அரசாங்கத்தையும் ஐரோப்பா மற்றும் ஜப்பான் அரசாங்கங்களையும் இவ்வாறான செயற்பாட்டை செய்யுமாறு வற்புறுத்தின. அதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றன. 1980கள் முழுவதும் என்ன நடந்தது என்பதை நீங்கள் ஞாபகப்படுத்தினால் இது புரியும். அந்தக் காலப்பகுதியில் கடன்கள் எதுவும் தள்ளுபடி செய்யப்படவில்லை. இந்த கடன்களை கடனாளி நாடுகள் தொடர்ச்சியாக சமாளிக்க முடியாது என்பது அனைவருக்கும் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் யாரும் கடன்களை தள்ளுபடி செய்வதை ஏற்க தயாராக இருக்கவில்லை. ஏனெனில் அது சர்வதேச வங்கி சமூகத்தின் ஸ்திரத்தன்மையை சிதைத்துவிடும்.

**பிணைமுறிக் கடன் மறு சீரமைப்பு உண்மையில் மிகவும் எளிமையானது. உண்மையில் அதில் இருப்பவை மூன்று கருவிகள் மட்டுமே. நாம் கடனின் அசலை குறைக்க முடியும். இதனை முடி வெட்டுதல் (haircut) என்று சொல்வார்கள்.**

எனவே அமெரிக்க அரசாங்கம் போன்ற அரசாங்கங்கள், கடனாளி நாடுகள் தங்கள் கடனுக்கான வட்டியை செலுத்துவதற்காக அதே வங்கிகளிலேயே அந்நாடுகள் கடன் வாங்க வேண்டியிருந்தாலும், வட்டியை செலுத்தும் செயல்முறையைத் தொடர வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தன.

இப்பொழுது IMF செயற்பாட்டுக்கு வருவோம். ஒரு கடனாளி நாடு தனது கடன்களை மறுசீரமைப்பதில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளைப் பற்றி பேசுவோம். எனது பார்வையில் IMF என்பது ஒரு சுவாரசியமான நிறுவனம். அது ஒரு நாட்டின் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உள்ள விகிதம் (debt to GDP ratio) பற்றி அதிக கவனம் செலுத்தும். உண்மையாக சொல்லப் போனால் ஒரு நாட்டின் கடன் வாங்குவதற்கான இயலுமையை மதிப்பிடுவதற்கு இந்த விகிதம் ஒரு மோசமான சுட்டி ஆகும். ஏனெனில் அது ஒரு டாலரின் நாளைய மதிப்பையும் 40 வருடங்களுக்கு பின் அதன் மதிப்பையும் ஒன்றாகவே எடை போடுகிறது. ஆனால் IMF பொருளாதார வல்லுனர்கள் தமது பொருளாதார உதவியின் விளைவாக சூரிடானியா, தன்னுடைய கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உள்ள விகிதத்தை 60 வீதமாக குறைத்துக் கொள்ளும் என்ற யோசனையுடனேயே பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார்கள். இந்த நிலைமையில் சூரிடானியாவின் நிதி அமைச்சருக்கு வேறு வழி கிடையாது. அந்த யோசனையை ஏற்றுக் கொண்டு வணக்கம் செலுத்தி விட்டு வரவேண்டியது தான்.

இதுதான் 2011 ஐப்பசி மாதம் 27 ஆம் திகதி கிரேக்கத்துக்கு நடந்தது. 26ஆம் திகதி நள்ளிரவு வரை IMF மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய உத்தியோகபூர்வ சக்திகள் கிரேக்கத்தின் வர்த்தக முறிக் கடனில் ஒரு யூரோ கூட மறுசீரமைக்கப் படுவதற்கு தடை விதித்திருந்தன. ஆனால் 27 ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கு அவர்கள் நிலைப்பாடு தலைகீழாக மாறியது. ஐரோப்பிய மத்திய வங்கி (ECB)இடமிருந்து கிரேக்கம் பெற்றிருந்த கடனைத் தவிர ஏனைய வர்த்தக முறிக் கடன்கள் யாவும் ஆகக்குறைந்தது 50 வீத முடி வெட்டுதலுக்கு (hair cut) உள்ளாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்கு கிரேக்கம் வணக்கத்துடன் இணங்கியது. இந்த முடிவை IMF உம் ஐரோப்பிய ஒன்றியமும் வெளியிட்டன. ஆனால் இந்தக் கடன் முறிப் பத்திரங்களை வைத்திருந்தவர்கள் தமது அசலின் 50 வீதத்தை கைவிடுவதற்கு எவ்வாறு இணங்க வைக்கப்படுவார்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. இங்கு ஒரு சுவாரஸ்யமான மாற்றம் ஒன்று நடந்து உள்ளது. பாரம்பரியமாக IMF ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் கடனின் பங்கைப் பார்த்து, அது சமாளிக்கப்படக் கூடியதா இல்லையா என்று முடிவெடுத்து வந்தது. அதாவது, IMF உதவித் திட்டத்திற்குப் பிறகு நாட்டின் கடன் பங்கு சமாளிக்கப் படக் கூடியதாக இருக்கும் என்று IMF ஊழியர்கள் நம்புகிறார்களா என்று அதன் ஆளுநர் குழுவிடம் சொல்ல வேண்டும். பாரம்பரியமாக இது ஒரு வெட்டு ஒன்று துண்டு இரண்டு முடிவாகும். ஆம் அல்லது இல்லை என்ற பதில் மட்டுமே இருக்க முடியும். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பிரேசில் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு கடன் வழங்கப்பட்ட போது இதுதான் நடந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கொள்கையை மாற்ற IMF முடிவு செய்தது. அவர்கள் இப்போது ஒரு இரண்டும் கெட்டான் பகுதி என்று ஒன்றை அனுமதிக்கிறார்கள். இங்கு IMF உதவியின் பின்னர் ஒரு நாட்டின் கடன் சமாளிக்கப்படக்கூடியதா இல்லையா என்று IMF ஊழியர்களால் உறுதியாக சொல்ல முடியாது. இந்தச் சூழலில், மறுவடிவமைத்தல் (reprofiling) என்று அழைக்கப்படும் ஒரு செயற்பாட்டை IMF அங்கீகரிக்கும். மறுவடிவமைப்பு என்பது முதிர்ச்சியின் நீட்டிப்பாகும். சில வேளைகளில் வட்டி விகிதம் குறைக்கப்படும். ஆனால் அசலில் குறைப்பு (முடி வெட்டுதல்) இல்லை. கடன் முதிர்வுக் காலத்தை நீடிப்பதுதான் நோக்கம். இச்செயற்பாடு கடன் முதிர்வுக் காலத்தை IMF உதவிக் காலத்திற்கு வெளியே நகர்த்துவதால் இது ஒரு பெரும் கவர்ச்சிகரமான தெரிவாக பார்க்கப்படுகிறது. இங்கு கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தில் கடனாளி நாடு IMF பணத்தில் தங்கியிருக்க வேண்டியதில்லை. அதுதான் இதன் முக்கிய அம்சம். அதாவது, ஐரோப்பாவில் முன்பு தான் விட்ட தவறை மீண்டும் செய்ய IMF விரும்பவில்லை. இந்த நடவடிக்கையின் நோக்கம் என்னவெனில், IMF திட்டம் அதன் நல்ல வேலையை முதலில் செய்யட்டும்.





ஐந்து ஆண்டுகளின் பின்னர் ரூரிடானியாவின் பொருளாதாரம் எங்கு உள்ளது என்பதைப் பார்ப்போம். அப்பொழுது ரூரிடானியாவிற்கு மேலும் நீடித்த கடன் நிவாரணம் தேவையா, அப்படியானால் அந்த கடன் நிவாரணத்தின் அளவு என்ன ஆகியவற்றை அப் பொழுது முடிவு செய்வோம். இந்த தர்க்கம் தோற்கடி க்கப்பட முடியாதது. இதற்கு சிறந்த உதாரணம் 2003 ஆம் ஆண்டு உருகுவேயில் நடந்த நிகழ்வு. ஆறு மாதங் களுக்கு முன்பு கூட உருகுவே முதலீட்டுக்கு சாதகமான தரத்தில் இருந்தது. சர்வதேச சந்தைகளில் பதினெட்டு கடன் பத்திரங்கள் அதற்கு இருந்தன. அவற்றின் வட்டிகளை உருகுவே மிகவும் ஒழுங்காக கட்டிக் கொண்டு வந்திருந்தது. ஆனால் ஆர்ஜன்டீனா, பிரேசில் ஆகிய நாடுகளுக்கு இடையில் இருக்கும் சிறிய நாடான உருகுவே அதனுடைய பெரிய அயல்நாடுகளின் பொருளாதாரப் பிரச்சனையால் தானும் பாதிக்கப்பட்டது.

அந்த பொருளாதார நெருக்கடியை சமாளி க்க IMF தன்னுடைய கடன்களை மறுவடிமைப்பு (reprofile) மட்டுமே செய்ய வேண்டும் என்று உருகுவே கணிசமான அளவுக்கு வாதிட்டது. முடிவில் அந்த கடன் பத்திரங்கள் ஒவ்வொன்றின் முதிர்வு தேதியும் ஐந்து ஆண்டுகள் தள்ளிப் போடப்பட்டது. அவற்றின் வட்டி விகிதங்கள் மாற்றப்படவில்லை. இந்த திட்டம் மிகவும் அற்புதமாக வேலை செய்தது. இந்த கடன் மறுசீரமைப்பை முடித்த 31 நாட்களுக்குப் பிறகு, உருகுவே முற்றிலும் தன்னார்வ அடிப்படையில் மீண்டும் பணமுறிச் சந்தைகளுக்குச் சென்று கடன் வாங்க முடிந்தது. மேற்கொண்டு உருகுவே எதுவும் செய்ய வேண்டி இருக்கவில்லை. அவர்கள் அந்த ஐந்தாண்டு காலத்தில் மேலும் கடன்களை பெற்றுக் கொண்டனர். அதன் பின்னர் இன்று வரை, 25 அல்லது 30 தடவைகள் உருகுவே பணமுறிச் சந்தைகளில் கடன் வாங்கியுள்ளது.

IMF இன் இந்த புதிய கொள்கை மேலும் மேலும் பயன்படுத்தப்படுவதை நாம் காணப் போகிறோம் என்பது என் யூகம் கடன் மறுவடிவமைத்தல் (reprofiling) போன்ற எந்த விதமான மிதமான கடன் மறுசீரமைப்பும் ஒரு சந்தேகக் கண் கொண்டே பார்க்கப்படும். இந்த வித மிதமான கடன் மறுசீரமைப்பு என்பது பிரச்சனை யை தள்ளிப் போட மட்டுமே பயன்படலாம். ஆனால், “5 ஆண்டுகளின் பின்னர் கடன்வாங்கும் நாடு சமாளிக்க கூடிய கடன் நிலவரத்தைக் கொண்டு இருக்குமா அல்லது அந்த தருணத்தில் தனது கடன்களை மறுசீரமைத்துக் கொள்ளும் தரத்தில் இருக்குமா என்று எமக்குத் தெரியாது” என்று கடன ளிக்கும் நிறுவனங்கள் சொன்னால் கடன் மறுவடி வமைத்தல் உதவி செய்யாது என்று IMF வாதிடும்..

இந்தக் கட்டத்தில் அவர்கள் பயந்தது நடக்கும். அதாவது, கடன் முறிச் சந்தைகள் கடன்வாங்கும் நாட்டுக்கு ஒரு நீடித்த கடன் மறுசீரமைப்பு வேண்டும் எனக் கேட்கும். அது இல்லாவிட்டால் கடன் வழங்க அவை மறுக்கும். கடன் மறுவடிவமைத்தலுக்கு (reprofiling) ஆதரவான வாதம் தோற்கடிக்கப் பட முடியாது என்று நான் முன்னர் சொன்னேன். ஆனால் அது அப்படியல்ல என்பதை இங்கே காண்கி றோம். அதாவது கடனாளி நாடு நாளைக்கு கடனளிக்கும் நிறுவனங்களிடம் போய் தனது கடன்கள் சமாளிக்கப்படக் கூடியவை என்று நிரூபிப் பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதனை இன்றே செய்வது நல்லது என்பதே அந்த வாதம். ஏனெனில் அதனைச் செய்தால் கடனளிப்பவ கள் உடனே கடனை வழங்குவார்கள் கடனாளியும் மீண்டும் மறுகடனெடுத்தல் (refinancing) என்ற சக்கர த்தில் ஏறி முடிவில்லாமல் சுற்றிக் கொண்டிருக்க முடியும்.

ஒரு கடனாளி நாடு தனது பிணைமுறிக் கடன்களை மறுசீரமைப்பதற்கு முடிவு எடுக்க முன்னர் சந்திக்க வேண்டிய பிரச்சினைகளை அடுத்து பார்ப்போம். முதலாவது விடயம் மிகவும் சர்ச்சைக்குரிய ஒன்றாகும். அது கடனாளி நாடு தனக்கு கடனளிப்பவர்களுடன் எவ்வாறு உரையாட வேண்டும் என்பது பற்றியது. ஒரு காலத்தில், அதாவது 1980கள் மற்றும் 90களில் வணிக வங்கிகள் கடனை மறுசீரமைக்க விரும்பும் ஒவ்வொரு கடனாளி நாடுகளிடமும் முன்வைக்கும் வாதம் இது தான். “எங்கள் கடன்களை மறுசீரமைத் தால் உங்கள் வங்கியாளர்களாகிய நாங்கள் இதனை ஒருபோதும் மன்னிக்க மாட்டோம். மறக்கவும் மாட் டோம். எனவே நீங்கள் செய்யப்போவது உங்களை நீங்களே காயப்படுத்துவது ஆகும்.” இது தெளிவாக முன்வைக்கப்பட்டாலும் இது ஒரு அபத்தமான வாதம்.

சூரிடானியா எங்களை மோசமாக நடத்தினால், அந்நாட்டினால் மற்றொரு பிணைமுறிக் கடன் பத்திரத்தை விற்க முடியாது என்று கடனளிப்பவர்கள் கூறுவதை நீங்கள் கேட்பீர்கள். உண்மையிலேயே அது பைத்தியக்காரத்தனம். ஏனெனில் உண்மையிலேயே பிணைமுறிக் கடன் பத்திரதாரர்களிடையே சகோதரத்துவம் என்பது இல்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஒருவருக்கு ஒருவர் கழுத்தை அறுத்துக் கொள்வார்கள். இரண்டாவதாக, நீங்கள் எதிர்காலத்தில் சூரிடானியாவுக்கு கடன் வழங்குவதற்கு தயாராக உள்ள ஒருவராக இருந்தால், சூரிடானியா இன்று சிக்கலில் சிக்கியுள்ளது என்றால், அதன் இன்றைய கடன் வழங்குனர்கள் மீது கத்தி வீசப்படுவதை நீங்கள் விரும்புவீர்கள். அந்தக் கத்தி வீச்சின் மூலம் சூரிடானியாவுக்கு கிடைக்கும் நிவாரணம் நாளை உங்களது முதலீட்டுக்கு பாதுகாப்பானதாக இருக்கும்.

ஆகவே, மன்னிக்க மாட்டோம், மறக்க மாட்டோம் என்ற சகாப்தம் நிச்சயமாக முடிந்து விட்டது. அந்தக் கட்டுப்பாடு இப்பொழுது அங்கு இல்லை. ஆனால் கடனாளி நாடு தனது கடன் வழங்குனர்களுடன் எவ்வாறு உரையாட வேண்டும் என்பதுதான் கேள்வி. கடனாளி நாடு “இது தான் நாம் செய்யப் போவது. இதற்கு ஒத்துக் கொள்ளுங்கள். அதைவிட வேறு வழி இல்லை (take it or leave it)” என்று தம்மை நோக்கி சொல்வதாக கடனளிப்பவர்கள் பல சமயங்களில் குற்றம் சாட்டுவதை நீங்கள் கேட்கலாம். கடனாளி நாடு தங்களை முதலில் புறக்கணித்து விட்டு கடைசியில் ஒரு கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுடன் தம்மை அணுகுவதாக கடனளிப்பவர்கள் குறை கூறுவார்கள். “அந்த முன்மொழிவை ஏற்றுக் கொள்ள வேண்டும், அல்லது அதனை நிராகரித்தால், நாங்கள் உங்கள் கடனை திருப்பிச் செலுத்துவதை நிரந்தரமாக நிறுத்தி ஒரு இருண்ட காலத்துக்குள் உங்களை தள்ளுவோம்” என்று கடனாளி நாடு சொல்லுவதாக கடனளிப்பவர்கள் குறை கூறுவார்கள்.

கடன் வழங்குனர்கள் இதுதான் நடப்பதாக சொன்னாலும் இது ஒரு பொழுதும் நடப்பதில்லை. எந்தவொரு கடனாளி நாடும் எந்தவிதமான கலந்துரையாடலும் இன்றி அதன் கடனை மறுசீரமைக்க முடியாது. கடன் கொடுத்தவர்களுடன் கலந்தாலோசிக்காமல் இருப்பது தற்கொலை செய்வதற்கு ஒப்பானது. இதன் மூலம் ஒவ்வொரு கடன் வழங்குனரும் மறுசீரமைத்தல் விதிமுறைகளை தமக்கு ஏற்றவாறு அமைக்க முடியும் என்று அர்த்தமில்லை. அதேவேளை, எந்த ஒரு கடனாளி நாடும் தனது கடன் மறுசீரமைத்தல் முன்மொழிவு எடுத்த எடுப்பிலேயே குப்புற விழுவதை விரும்ப மாட்டாது. கடனளித்தவர்களை புறக்கணித்தால் இருக்கும் ஆபத்து இதுவாகும். இந்த கலந்துரையாடல் இரண்டு வழிகளில் செய்யப்படுகிறது. முதலாவது வழி “கடனளித்தவர்களுடன் கலந்தாலோசனை (creditor consultation)” என்பதாகும். இங்கு கடனாளி நாடு ஒரு நிதி ஆலோசகரை நியமிக்கும். நிதி ஆலோசகர் கடனளித்தவர்களிடம் தனித்தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ பேசி அவர்களின் மனக்கிடக்கையை அறிந்து கொள்கிறார். கடனாளி நாடு என்ன செய்யப் போகிறது என்பதை அவரால் சட்ட ரீதியாக வெளியிட முடியாது. ஆனால் சில அனுமானங்களை வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியும். உதாரணமாக, “சூரிடானியா 30% கடன் தள்ளுபடியுடன் உங்களை அணுகினால் அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ”என்று அவர் கேள்வி கேட்கலாம். அதற்கு பதிலாக ”நாங்கள் அதை விரும்ப மாட்டோம்.” என்பதுதான் கடனளித்தவர்களின் முதல் வாக்கியமாக இருக்கும். ஆனால், இரண்டாவது வாக்கியமாக, ”வேறு வழியில்லாவிட்டால் நாங்கள் அதை ஏற்றுக் கொள்வோம். அதனையிட்டு கோபப்படுவோம்.” என்று அவர்கள் சொல்லக் கூடும்.

நிதி ஆலோசகர் இந்த கலந்துரையாடலின் பலனை கடனாளி நாட்டுக்கும் IMF இற்கும் எடுத்துச் செல்வார். கடனளித்தவர்களின் ஒப்புதல் கிடைக்கக் கூடிய கடன் மறுசீரமைத்தல் தொடர்பான எல்லைகள் என்ன என்பதை அவர் தெரிவிப்பார். IMF ஐப் பொறுத்தவரை இந்த கடன் மறுசீரமைத்தல் முன்மொழிவுக்கு கடனளித்தவர்களின் பெரும்பான்மையினர், பொதுவாக 85 அல்லது 90 வீதமானவர்கள், உடன்பட வேண்டும் என்று சொல்லும். அந்த வகையில் கடனளித்தவர்களுடன் கலந்தாலோசனை, கடனளித்தவர்களின் அதி உச்ச விகிதாசாரத்தினர் ஏற்றுக் கொள்ளக்கூடிய கடன் மறுசீரமைத்தலுக்கான முன்மொழிவுகள் என்பவை இந்த முதலாவது வழியில் முக்கியமானவை

இரண்டாவது வழி சர்ச்சைக்குரியது. இந்த வழியில் கடனாளி நாடு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடன் வழங்குநர் குழுக்களை (creditor committee) அங்கீகரித்து அவற்றினூடாக கடனளித்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். கலந்தாலோசனை, பேச்சுவார்த்தை ஆகிய இரண்டுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் முக்கியமானது. முதலாவது வழி கடனளிப்பவர்களுடன் கலந்தாலோசிப்பது பற்றி கதைக்கிறது. இரண்டாவது வழி கடனளித்தவர்களுடன் பேரம் பேசுவதைப் பற்றிக் கதைக்கிறது. ஏன் இரண்டது வழி சர்ச்சைக்குரியது என்றால், கடனளித்தவர்கள் ஒரு கடனாளியுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது சிறந்த முடிவு

தமக்கு கிடைக்கும் என்று நம்புகிறார்கள். ஆனால் இது உண்மை என்று வரலாறு சொல்லவில்லை. வரலாறு அந்த நம்பிக்கை சரியென்று சொல்லா விட்டாலும் கடனளித்தவர்கள் அதை நம்பு கிறார்கள். ஆனாலும், கடன் வழங்குனர் குழுக்களை அங்கீகரிப்பதனால் கடனாளி நாட்டுக்கு சில நன்மைகள் இருக்கின்றன. முதலாவது, இவ்வாறான ஒரு குழு இருந்தால் கடனாளி நாட்டின் கணக்கு வழக்குகளை அவர்களே சரிபார்ப்பார்கள். கட னாளி நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி பற்றிய கூற்றுக்களை சரி பார்ப்பார்கள், IMF உடன் கலந்தாலோசிப்பார்கள், தேவையான அனைத்து வேலைகளையும் செய்வார்கள். இது மிகவும் பயனுள் ளதாக இருக்கிறது. இரண்டாவது ஒவ்வொரு கடனளி த்தவரும் கடன் மறுசீரமைப்பின் விதிமுறைகள் தம்மைப் போன்ற ஒரு கடனளித்தவர் குழுவால் பேச்சு வார்த்தை மூலம் எய்தப்பட்டது என்பதை அறிந்து நிம்மதி அடைவார். அதாவது தாங்கள் பேச்சுவார்த்தை மூலம் அடையக் கூடிய சிறந்த தீர்வு இதுதான் என்ற செய்தி அவர்களுக்கு மறைமுகமாக தெரிவிக்கப்படும்.

இவ்வாறான ஒரு கடன் மறுசீரமைப்பு ஒப்ப ந்தம் ஏற்பட்டால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட கடன் வழங்குனர் குழு அதற்கு ஒரு நல்ல தர முத்திரையை அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும். ஆகவே, பரந்த கடனளிப்பாளர் சமூகத்திற்கு இந்த ஒப்பந் தம் சமர்ப்பிக்கப்படும் போது, பொதுவாக அது ஒரு கடன் வழங்குநர் குழுக்களினது கூட்டுச் செய்திக் குறிப்பாக வெளியிடப்படும். அதில் முரிடானியா கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களிற்கான கடன் வழங்கு னர் குழுவும் அதன் அங்கத்தவர்களும் அந்த கடன் மறு சீரமைப்பு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர் பார்க்கப் படுவதாகவும் ஏனைய கடனளித்தவர்களும் அதனை ஏற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்படுவதா கவும் தெரிவிக்கப்படும். இது மிகவும் பயனுள்ளது.

ஆனால் கடன் வழங்குனர் குழுக்களை அங்கீகரிப்பதில் சில பிரச்சனைகள் இருக்கின்றன. இங்கே கொஞ்சம் வரலாற்றைப் பார்ப்போம். 1980 களில் வணிக வங்கிகள் மத்தியில் குறிப்பிடத்தக்க வகையில் கூட்டு ஒழுங்குக்குள் இருந்தன. எனவே மெக்சிகோ தான் வட்டிகளைக் கட்டப் போவதை நிறுத்தப் போவதாக அறிவித்த ஒரு வாரத்திற்குள் மெக்சிகோவிற்கான வங்கி ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுவிட்டது. அந்தக் காலகட்ட த்தில் தங்கள் கடனை மறுகட்டமைக்க தள்ளப்பட்ட 24 அல்லது 25 நாடுகளுக்கு இவ்வாறான ஆலோசனைக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இந்தக் குழுக் களில் கடனாளி நாட்டிற்கு மிகப்பெரிய கடன்களை வழங்கியவர்கள் பொதுவாக அங்கம் வகித்தனர். புவியியல் ரீதியிலும் அவர்களின் பிரதி நிதித்துவம் அங்கு இருந்தது. அதாவது இக்குழுக் களில் எப்பொழுதும் ஒரு ஜப்பானிய வங்கி இருக்கும், இரண்டு ஐரோப்பிய வங்கிகள் இருக்கும்.

அவர்கள் கடன் மறுசீரமைப்பின் விதிமுறை களுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்தினர். அந்த விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக சட்ட வாக்கங்களைக் கூட அவர்களை தீர்மானித்தார்கள். சில வருடங்களுக்கு இது அற்புதமாக வேலை செய்தது. இந்த வங்கி ஆலோசனைக் குழுக்கள் பரந்துபட்ட வங்கிச் சமூகத்தின் மீது தமக்கிருந்த போதுமான செல்வாக்கை பயன்படுத்தினார்கள். அதனால் இந்த உடன்பாட்டை எதிர்த்து ஒருவரும் நிற்கவில்லை.

ஒரு சிறிய வங்கியாக இருந்து கொண்டு, இந்த மறுசீரமைப்பு உடன்படிக்கைக்கு ஒத்துப் போவதில்லை என்று முடிவு செய்தால், சிற்றி வங்கி (City Bank) இன் தலைவரிடமிருந்து அந்த சிறிய வங்கிக்கு முதலில் ஒரு தொலைபேசி அழைப்பு வரும். “நியூயார்க்கில் உள்ள வங்கிகளுடன் உள்ள உறவை நீங்கள் பேண விரும்பினால் இந்த ஒப்பந்தத்துக்கு நீங்கள் இணங்க வேண்டும்“ என்று சொல்லப்படும். அந்த வங்கி அதையும் எதிர்த்து நின்றால், அதனை மேற்பார்வையிடும் மேலிடமாகிய அமெரிக்காவின் மத்திய வங்கி (Federal Reserve) இடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வரும். “நான் சொல்வதை கவனமாக கேளுங்கள். அங்கிள் சாம் (uncle Sam) நீங்கள் இந்த மறுசீரமைப்பில் இணைந்து கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்.”என்று சொல்லப்படும். அதன் பின்னர் சிறிய வங்கிக்கு வேறு வழியில்லை.

அடுத்த இதழில் முடிவுறும்...

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், சர்வதேச நாணய நிதியமும்

- பிரெடி ஆபிரகாம் -
(முகநூலில் இருந்து)

சர்வதேச நாணய நிதியம் (IMF) என்பது இன்று பலரது வாயில் ஒரு பேசு பொருள். எமது நாடு இன்று எதிர்நோக்கும் பிரச்சனைக்கு IMF ஒன்றே தீர்வைத் தரும் என்பது பலரது நம்பிக்கை. அதில் உண்மையும் இல்லாமல் இல்லை. ஆனால் IMF இன் நிதியுதவி என்பது வங்கிக்கு சென்று கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்வது போன்ற ஒன்றாகவும், அதற்கு வங்கி முகாமையாளரிடம் அவருக்கு நன்கு அறிமுகமான, ஒரு படித்த டை கட்டிய நபரைத் தூது அனுப்பினால் வங்கி முகாமையாளர் கடனை இலகுவாக ஒப்புதல் அளித்து விடுவார் என்பது போன்றும் பலர் இங்கு நம்பிக் கொண்டிருப்பதில் தான் தவறு உள்ளது.



அப்படி நம்பிக் கொண்டிருக்கும் பலருக்கு இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்தோ, அல்லது IMF குறித்தோ சிறந்த புரிதல் இல்லை என்றே கருத வேண்டி இருக்கிறது. இலங்கை இந்த இக்கட்டான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இன்று IMF இன் கடனுதவியை மலைபோல நம்பிக் கொண்டிருக்க சில விசேட காரணங்கள் உள்ளன. பொதுவாக நாடுகள் மற்றும் பாரிய வணிக நிறுவனங்கள் போன்றவை சர்வதேசத்திலோ, உள்ளூரிலோ கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அந்த நாடுகளினதும், வணிக நிறுவனங்களினதும் தர மதிப்பீடுகள் கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்த தர மதிப்பீடுகளை Fitch Ratings, Moody's Investors Service , Standard & Poor Global போன்ற சில முன்னணி சர்வதேச நிறுவனங்கள் மேற்கொள்கின்றன.

எமது நாடு சில மாதங்களுக்கு முன்பு போதிய அந்நியச்செலாவணி கையிருப்பில் இல்லாததால் வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்துவதாக இலங்கையின் மத்திய வங்கி ஊடாக அறிவித்திருந்தது. இதனையடுத்து தர மதிப்பீடு செய்யும் அனைத்து நிறுவனங்களும் இலங்கையின் தர மதிப்பீட்டை B இலிருந்து CCC ஆகக் குறைத்தன. CCC என்னும் இந்த தர மதிப்பீடானது, உண்மையில் தர மதிப்பீட்டின் இறுதி நிலையான D (Default) இற்கு முன்னைய நிலையாகும். இந்தத் தர மதிப்பீட்டுடன் இலங்கையால் எந்த ஒரு நாட்டிடமோ அல்லது சர்வதேச நிறுவனங்களிடமோ கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இந்த நிலையில் இலங்கைக்கு எஞ்சியிருக்கும் ஒரே வழி இலங்கை அங்கம் வகிக்கும் IMF இடமிருந்து கடன்களைப் பெற்றுக் கொண்டு தற்காலிக நிவாரணம் ஒன்றைத் தேடுவதே ஏனென்றால் IMF என்னும் உலக நாடுகளின் அமைப்பில் இவ்வாறு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும், அல்லது சிக்கவிருக்கும் அங்கத்துவ நாடுகளுக்கு கடனுதவிகளை வழங்க போதியளவு ஏற்பாடுகள் உள்ளன.

ஆனால் இங்குள்ள சிக்கல், நாம் சாதாரணமாக வங்கிக்கு சென்று நகையினை அடகு வைத்துவிட்டு பணத்தைப் பெற்றுக்கொள்வது போன்று IMF இன் கடனுதவியைப் பெற்றுக்கொள்ள முடியாது. IMF இன் கடன் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் நாடு, அதற்காக IMF விதிக்கும் கடனுக்கு முன்னதான, அல்லது பின்னதான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. பெரும்பாலும் இந்த நிபந்தனைகள் கடன் கேட்கும் நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையினை மீட்டெடுக்கும் வகையில் இருக்கும் என்பதால் IMF நிதியுதவி ஒன்றைப் பெற்றுக் கொள்வது சர்வதேசத்தில் அந்த நாட்டின் நம்பகத் தன்மையை அதிகரிக்கும்.

அதன் தொடர்ச்சியாக அந்த நாட்டின் தர மதிப்பீடு மீள்பரிசீலனை செய்யப்படலாம். அவ்வாறு தர மதிப்பீடு மீள்பரிசீலனை செய்யப்பட்டு தரம் உயர்த்தப்படும் சந்தர்ப்பத்தில், அந்த நாடு பிற நாடுகளிடமும், கடன் வழங்கும் நிறுவனங்களிடமும் மேலதிகமாக இருதரப்பு அல்லது பலதரப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்ளும் ஏதுநிலை உருவாகும். இதனாலேயே இவ்வாறான இறுக்கமான சூழ்நிலைகளில் IMF வழங்கும் கடனுதவியானது IMF பிணையெடுப்புப் பொதி (Bailout Package) என்று அழைக்கப்படுகிறது. மேலே குறிப்பிட்டவை எல்லாம் பொதுவான விடயங்கள். இப்போது இலங்கையின் நிலைக்கு வருவோம். IMF பொதியை இலங்கையால் பெற்றுக்கொள்ள முடியுமா என்று ஆராய்ந்தால் முடியும் என்பதுதான் பதிலாக இருக்கும்.

ஆனால் அந்தப் பொதியை அவ்வளவு இலகுவாக எமது நாட்டினால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தான் இன்றைய மில்லியன் டொலர் கேள்வி. அதற்குக் காரணம் இலங்கையின் அரசியல் மட்டத்தில் இன்று காணப்படும் பாரிய குழப்ப நிலைகள். என்னதான் இன்றைய அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருந்தாலும், மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கு என்பது மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றது என்பது எமது நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே தெரிந்த ஒரு விடயம். அண்மைய நாட்களில் Fitch Ratings நிறுவனம் தெரிவித்திருந்த கருத்துக்களும் இதனையே உறுதி செய்கின்றன. Fitch Ratings நிறுவனமானது நடப்பு அரசாங்கம் பாராளுமன்றத்தில் போதிய பலத்துடன் காணப்பட்டாலும், மக்கள் மத்தியில் அது மிகவும் பலவீனமாகக் காணப்படுவது இலங்கையின் தரப்படுத்தலில் தொடர்ந்தும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் IMF உடன் ஊழியர் நிலை ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கிக்கொள்ள IMF வைத்துள்ள முன்நிபந்தனைகளில் முக்கியமானது இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன்களின் மறுசீரமைப்பாகும். இலங்கை தற்போதைக்கு கடன் மறுசீரமைப்பு செய்துகொள்ள உத்தேசித்திருக்கும் கடன் தொகை ஏறக்குறைய 24 பில்லியன் டொலர்களாகும். ஆனால் இலங்கையின் மொத்த கடன் தொகை சராசரியாக 69 பில்லியன் டொலர்களாகும். இலங்கை மத்திய வங்கி இலங்கையின் மொத்த கடன்களை 50 பில்லியன் டொலர்களுக்கு அண்மித்த தொகைக்கு குறைத்து மதிப்பீடு செய்து வைத்திருக்கிறது என்பது பல பொருளாதார நிபுணர்களின் வாதம். இந்த கணக்குகள் சரிபார்க்கப்பட வேண்டும் என்பதுவும் IMF நிவாரணக் கடன் பொதியைப் பெறுவதில் தாமதத்தை ஏற்படுத்தும் ஒரு காரணி என்பது உண்மை.

இலங்கை 24 பில்லியன் டொலர்கள் பெறுமதியான கடன்களை மறுசீரமைக்க முற்படும் நிலையில், மிகுதி 45 பில்லியன் கடன்களை மறுசீரமைக்காமல் போனால், இந்தக் கடன்களை இலங்கை செலுத்த முடியாமல் திவாலாகும் நிலை தோன்றலாம். எனவே இந்தக் கடன்களுக்கான கடன் வழங்குனர்களுடன் இலங்கை ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதை IMF விரும்புகிறது. அதனாலேயே இலங்கையின் வெளிநாட்டுக் கடன்கள் அனைத்தும் மறு சீரமைக்கப்படுவதை IMF முன் நிபந்தனையாக விதித்துள்ளது.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் தொடர்பில் சீனாவுடன் பேச்சு நடாத்துமாறு IMF இலங்கைக்கு மேலதிக நிபந்தனை விதித்திருப்பதாக அண்மைய நாட்களில் செய்தி வெளியாகியிருந்தது இதனையே காட்டுகிறது. இது உண்மையில் மேலதிகமான ஒரு நிபந்தனை அல்ல. இந்த நிபந்தனை ஏற்கனவே விதிக்கப்பட்டது தான். ஆனால் இலங்கை அரசு அதனை வெளிப்படுத்தவில்லை. இலங்கை மறுசீரமைப்பு மேற்கொள்ள உத்தேசித்திருக்கிற கடன்களுக்குள் பல இருதரப்புக் கடன்களும், சர்வதேச இறையாண்மைக் கடன் பத்திரங்களும் உள்ளடக்கப்படவில்லை. கடன் மறுசீரமைப்பு ஒன்றிற்கு இந்தக் கடன் வழங்குனர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள் என்று அரசு கருதுவது ஒரு காரணமாக இருக்கலாம். அதற்கு உதாரணமாக ஹமில்டன் வங்கி இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவில் தாக்கல் செய்துள்ள வழக்கினைக் குறிப்பிடலாம். குறிப்பாக இந்தக் கடன் வழங்குனர்கள் IMF உடனான கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ள ஒரு முக்கிய தடைக்கல்லாக இருக்கப் போகிறார்கள் என்பதே உண்மை.

இந்த நிலையில் இலங்கையானது இந்த நிபந்தனையில் விதிவிலக்கு வழங்குமாறு IMF இற்கு கோரிக்கை விடுக்கலாம். ஆனாலும் இந்த நிபந்தனைக்கு விதிவிலக்கு வழங்குவதற்கான சாத்தியப்பாடு என்ன என்பது குறித்து இன்னும் தெளிவில்லை. இறுக்கமான சட்டதிட்டங்களைக் கொண்ட IMF அமைப்பு தனது நடைமுறை சட்டங்களை மீறி கடன் வழங்கலின் அடிப்படை நிபந்தனைகளுக்கு விதிவிலக்கு அளிக்குமா என்பது கேள்விக் குறியே. இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக IMF தெரிவிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்த ஒத்துழைப்புக்கள் IMF இன் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே இருக்கும் என்பதையும் அவர்கள் கூறத் தவறுவதில்லை என்பதை நாம் அவதானிக்க வேண்டும். இந்தத் தடைகளை எல்லாம் கடந்து இலங்கை ஒரு ஊழியர் நிலை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு விட்டாலும் அதன் அடுத்த கட்டம் என்பது IMF இன் நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெறுவதாக இருக்கும். இந்த நிலையில் அமெரிக்காவின் செனட் சபை வெளியுறவுக் குழு வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலங்கைக்கு மிகவும் சிக்கலாக அமைந்துள்ளது.

செனட் சபையின் வெளியுறவுக் குழுவானது இலங்கைக்கு மூன்று பிரதான நிபந்தனைகளை மேலதிகமாக விதித்துள்ளது. அவற்றுள் முதலாவது மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்தல், இரண்டாவது சட்டவாட்சியை நிறுவுதல், மூன்றாவது ஊழலுக்கெதிராக வினைத்திறனான பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்தல். அமெரிக்கா, மற்றும் அதன் கூட்டாளிகள் IMF இன் நிர்வாகக் குழுவில் அரைவாசிக்கும் அதிகமான வாக்குரிமையைக் கொண்டிருக்கும் நிலையில் இந்த நிபந்தனைகள் இலங்கைக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக அமைகின்றன.

இந்த நிபந்தனைகளை இலங்கை எவ்வாறு கையாளப் போகிறது என்பதைப் பொறுத்தே IMF இன் உதவிகள் இலங்கைக்கு கிடைக்கலாம். ஆனால் அரசு இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற முனையும்போது அரசுக்குள்ளிருந்தே பலத்த எதிர்ப்புகள் எழுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அதற்குக் காரணம் இன்றைய அரசாங்கமானது முழுமையாக பொதுஜன பெரமுனவின் வாக்குகளிலேயே தங்கியுள்ளது.

அரசு முதலாவது நிபந்தனையை பூர்த்தி செய்ய முயலுகையில் நிகழக் கூடிய விடயங்கள் என்ன? மத்திய வங்கியின் சுயாதீனத்தை அரசு உறுதிசெய்ய முற்பட்டால், அதன் பின்னர் அரசாங்கத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு அரசினால் பணத்தை கண்டமேனிக்கு அச்சடித்துக் கொள்ள முடியாது. அதனால் பணம் அச்சடிப்பதை வரையறுக்க வேண்டிய தேவை அரசுக்கு ஏற்படும். இதனால் அரச செலவீனங்களை சமாளிக்க போதுமான வருமானத்தை ஈட்டுவதற்கு, அரசு மாற்று வழிகளைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அதற்கான ஒரே வழி உடனடியாக அரசின் வரி வருமானத்தை அதிகரிப்பதே. அதற்காக அரசாங்கம் வரிகளை அதிகரிக்கும்போது இயற்கையாகவே பொருட்களின் விலையும் அதிகரிக்கும். அது மறுபுறமாக அரசின் மீது மேலும் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தும். கிடைத்த சந்தர்ப்பத்தை முற்றாகப் பயன்படுத்தி தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க விரும்பும் எமது அரசியல்வாதிகள் இதனை ஒருபோதும் விரும்பப் போவதில்லை.

அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவின் இரண்டாவது நிபந்தனை இலங்கையில் சட்டவாட்சி நிலவுவதை உறுதி செய்தல். இதற்கு தீர்வாக அரசு நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து பாராளுமன்ற ஆட்சியை ஏற்படுத்த முனையலாம். ஆனால் அதற்கும் அரசாங்கத்திற்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவு அவசியம். ஏனென்றால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இன்னும் பொதுஜன பெரமுனவின் கைகளில் இருப்பதாலும், பொதுஜன பெரமுனவின் பிடி இன்னும் ராஜபக்ச குடும்பத்தின் கைகளில் இருப்பதாலும் அந்தக் குடும்பத்தின் ஆதரவு இன்றி இது நடைபெற சாத்தியம் இல்லை. அதனையும் மீறி ஜனாதிபதி இதனை நிறைவேற்றி முடித்தால் அடுத்த நிபந்தனை மீண்டும் தலையிடியாக மாறும். அதுதான் அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவின் மூன்றாவது நிபந்தனையான ஊழலுக்கு எதிரான ஒரு வினைத்திறனான பொறிமுறையை உருவாக்குதல். ஏற்கனவே நடப்பு அரசாங்கம் மக்கள் மத்தியில் பலவீனமாக இருக்கிறது. அரசுக்கு இருக்கும் ஒரே பலம் பாராளுமன்றம் மட்டுமே. ஆனால் அந்தப் பலமும் முழுவதுமாக மொட்டு கட்சியிலேயே தங்கியுள்ளது. இந்த நிலையில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பது வெறும் கண் துடைப்பாக இருப்பதை IMF விரும்பாது. அதேவேளை ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளால் பெருமளவு பாதிக்கப்படுவது பொதுஜன பெரமுனவாகவே இருக்க முடியும். ஏனென்றால் அந்தக் கட்சியின் மீதே அதிகளவான ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஜனாதிபதி இந்த மூன்றாவது நிபந்தனையை நிறைவேற்ற முனைந்தால் நிச்சயமாக பாராளுமன்றத்திலும் பலவீனமடைந்து விடுவார். இது பொதுஜன பெரமுனவின் இருப்பை நிர்ணயிக்கும் ஒரு பிரச்சனை என்பதால் இங்கு பேரம் பேசல்களும் சாத்தியப்படப் போவது இல்லை. இந்த இடத்தில் பெரும்பாலும் அரசாங்கம் ஆப்பிழுத்த குரங்கின் நிலையை அடைவதற்கே சாத்தியக் கூறுகள் உண்டு.

சரி. இந்தத் தடைகள் எல்லாவற்றையும் வெற்றிகரமாகத் தாண்டி இலங்கை IMF இன் கடனுதவியைப் பெற்றுவிட்டது என்றே வைத்துக் கொள்ளுங்கள். அது இலங்கையின் நெருக்கடி நிலையைத் தீர்க்குமா என்றால் இல்லை என்பதே சரியான பதிலாக இருக்கும். IMF இன் கடன் உதவிகளை இலங்கை மிக விரைவாகப் பெற்றுக் கொண்டாலும் கூட அது இந்த வருட இறுதியளவிலேயே எமக்கு கிடைக்க வாய்ப்புண்டு. IMF இனால் வழங்கப்படக்கூடிய உடனடிக் கடனுதவி ஏறக்குறைய 2.9 பில்லியன் டொலர்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது குறிப்பாக மத்திய வங்கியின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரிக்கவே பயன்படுத்தப்படும். நாம் எதிர்பார்ப்பது போன்று இந்த டொலர்களைக் கொண்டு எந்தவொரு அத்தியாவசிய பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியாது. இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதிக்காக மாதாந்தம் தேவைப்படும் தொகை ஏறக்குறைய 800 மில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இறக்குமதிக்கான டொலர்கள் பற்றாக்குறை தொடர்ந்தும் இருக்கவே செய்யும். இதனை நிவர்த்தி செய்ய அரசாங்கம் தனது நட்பு நாடுகளிடமிருந்து இணைப்புக்கடன் (Bridging Finance) வசதியாக ஒரு 5 பில்லியன் டொலர்களையாவது பெற்றுக் கொண்டால் தான் இன்று நாட்டில் காணப்படும்.



வரிசைகளைத் தற்காலிகமாக சிறிது காலத்திற்கு ஒத்திவைத்து ஆசுவாசப்படுத்திக்கொண்டு அரசாங்கம் தன்னை அடுத்த கட்டத்திற்கு தயார் செய்துகொள்ள முடியும். இந்த கடனுதவிகளைப் பெற பூகோள அரசியல் சார்ந்த இராஜதந்திர செயற்பாடுகள் மிக அவசியம். ஆனால் நடப்பு அரசாங்கத்தின் சமீபத்திய செயற்பாடுகள் பூகோள அரசியலில் இலங்கையின் நிலைமையை மேலும் மோசமாக்கி வருவது போன்றே தென்படுகிறது. அண்மையில் காலிமுகத்திடலில் நடந்த சம்பவங்களுக்கு உலக அரங்கில் எழுந்த கடுமையான கண்டனங்கள் அதற்கு ஒரு சான்று. மனித உரிமைகளை மதிக்காவிட்டால் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி சலுகையை இழந்துவிடும் என்று எச்சரிக்கும் அளவிற்கு நிலைமைகள் சென்றிருந்தன. இந்த அழுத்தங்கள் காரணமாக வெளிநாடுகளின் தூதுவர்களை அழைத்து விளக்கமளிக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஜனாதிபதியும் தள்ளப்பட்டார்.

மறுபுறமாக IMF இடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மட்டுமே, ஒரு நாடு பொருளாதாரத்தில் வளர்ந்துவிட முடியும் என்றால், 1965 ஆம் ஆண்டிலிருந்து 16 தடவைகள் IMF இடம் கடன்களைப் பெற்றுக் கொண்ட இலங்கை இன்று பொருளாதார வளர்ச்சியில் உச்சம் தொட்டிருக்க வேண்டும். மாறாக இன்று இலங்கை ஒரு வங்குரோத்து நிலையிலேயே உள்ளது. IMF இடமிருந்தும் ஏனைய நாடுகளிடமிருந்தும் கடன்களைப் பெற்றுக் கொள்வது இலங்கைக்கு நன்மை பயக்கும் என்பது உண்மை. ஆனால் அது மட்டுமே போதுமானது அல்ல. இந்த உதவிகள் இலங்கையின் சென்மதி நிலுவைகளில் காணப்படும் பற்றாக்குறைகளை ஓரளவு நிவர்த்தி செய்து ஸ்திரப்படுத்த உதவலாம். ஆனால் பாதீட்டுத் திட்டத்தில் இருக்கும் பற்றாக்குறையை இது நிவர்த்தி செய்யப்போவது இல்லை. இதற்கான ஒரே தீர்வு இலங்கையை இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க இலங்கையில் முழுமையான ஒரு பொருளாதார மறுசீரமைப்பைச் செய்து பொருளாதாரத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளின் வளர்ச்சியை ஊக்குவித்தலே ஆகும். இதுவே Real Sector Growth என்று கூறப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்ற பின்னர் அமைச்சரவையும், நாட்டின் ஜனாதிபதி, பிரதம மந்திரி உட்பட எல்லா அமைச்சர்களும் பல தடவைகள் மாறிவிட்டாலும் இலங்கையின் முழுமையான பொருளாதார சீரமைப்பிற்கான அல்லது Real Sector Growth இற்கான ஒரு திட்டம் இன்னும் முன்மொழியப்படவில்லை என்பது மிகவும் துரதிடஷ்வசமானது. இதனைச் சுட்டிக் காட்டியே உலக வங்கியும் இலங்கைக்கு உதவுவதற்காக இதுவரை எந்தவொரு எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளது.

அரசாங்கமும், அரச அதிகாரிகளும் பல்வேறு உறுதிமொழிகளை மக்களுக்கு மாறிமாறி வழங்கி வந்தாலும் இதுவரை காலமும் காத்திரமான எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதையே களநிலவரம் காட்டுகிறது. எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், பதுக்கல் மற்றும் கறுப்புச் சந்தையைக் கட்டுப்படுத்தவும் ஒரு வினைத்திறனான பொறிமுறையை அமுல்படுத்தவே இலங்கையின் அரசாங்கத்திற்கு ஏறக்குறைய ஒரு வருடம் பிடித்துள்ளது. அந்த முறையும் இன்னும் பரீட்சார்த்த நிலையிலேயே உள்ளது. எரிபொருள் பற்றாக்குறை இன்னமும் தீர்ந்து விடவில்லை. ஆனால் இந்த பங்கீட்டு முறைமை சிறிது காலத்திற்கு முன்பு நடைமுறைக்கு வந்திருந்தால் எரிபொருள் பற்றாக்குறை தொடர்பான பிரச்சனைகள் முன்னமேயே கட்டுக்குள் வந்திருக்கும். எரிபொருள் நெருக்கடியால் ஏற்பட்ட அசௌகரியங்களையும் தவிர்க்கப்பட்டிருக்கும். இந்த நிலையில் ஒரு முழுமையான பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை இதிலிருந்தே கணித்துக் கொள்ளலாம்.

அடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்ற ஆரம்பிக்கும் பொழுது சாதாரணதர மக்கள் மீது அதிக பொருளாதார அழுத்தங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. இதற்கான மாற்றுவழி ஒன்று உருவாக்கப்படாவிடின் இது மீண்டும் அரசிற்கு எதிரான வெறுப்புணர்வை மக்கள் மத்தியில் அதிகரிக்கும். அதேவேளை அரசியலமைப்பு மாற்றங்கள் மற்றும் ஊழலுக்கெதிரான பொறிமுறைகள் என்பன தற்பொழுது பெரும்பான்மைப் பலத்துடன் இருக்கும் அரசாங்கத்துக்குள்ளும் பல்வேறு பிளவுகளைத் தோற்றுவிக்கும். இவ்வாறான குழப்ப நிலைகள் எமது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் தொடர்ந்தும் தடையை ஏற்படுத்தவே போகின்றன.




இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 30.08.2022 அன்று வெளியிடப்பட்டது